**மூன்றாவது கூடுதல் சார்பு நீதிமன்றம் ,கோயமுத்தூர்**

நாள் : 10.08.2026

அ.வ.எண் : 410 /2023

(சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். )

PW 1 – சங்கர்சுப்ரமணியம்

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**ஆரம்பிக்கும் நேரம் 12.45 PM**

பி.வா.சா.ஆ.9 தான செட்டில் மெண்ட்பத்திரத்தின் அசல் என்னிடம்தான் உள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.9 ன் அசலை என்னால் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். பி.வா.சா.ஆ.9 ன் அசலை சாட்சி கையில் வைத்திருந்தார். வேறு யாரையாவது சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் இல்லை. போதுமான ஆவணம் என்னிடம் உள்ளது அதனை தாக்கல் செய்வேன். தாவாசொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்களா என்றால் ஆமாம். நான் அனைத்து ஆவணங்களை தாக்கல் செய்தேன் என்றால் இந்த வழக்கு எனக்கு எதிராக சென்றுவிடும் என்றால் தவறு.

தாவாவில் இரண்டு அயிட்ட சொத்துக்கள் உள்ளன. தாவா இரண்டு சொத்துக்களில் யார் யார் சுவாதீனத்தில் உள்ளனர் நான் ஒரு சொத்திலும் வாதி ஒரு சொத்திலும் உள்ளார் என்றால் வாதி எந்த ஆவணத்தின் அடிப்படையில் சொத்தின் சுவாதீனத்தில் உள்ளார் என ஆட்சேபனை தெரிவிக்கிறேன். நான் இந்த வழக்கில்தான் ஆட்சேபனை தெரிவிக்கிறேன் என்றால் இல்லை. இதற்கு முன்பே கூறியுள்ளேன். எந்த ஆவணத்தின் அடிப்படையில் ஆட்சேபனை செய்தேன் என ஆவணம் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். ஆட்சேபனை ஆவணத்தை தாக்கல் செய்ய இயலுமா என்றால் முடியும்.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது )**

**முடிக்கும் நேரம் 01.2 PM**

Sd/–S.Dhanalakshmi
மூன்றாவது கூடுதல் சார்பு நீதிபதி,
கோயமுத்தூர்.

10.08.2026